**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 05.06.2020

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2050 விகாரி, வைகாசி மாதம் 23ஆம் நாள் **05.06.2020 வெள்ளிக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01**:

தேனி – அல்லிநகரம் நகராட்சியின் விரிவாக்கப்பகுதியில் புதியதாக தார்ச்சாலை, மழைநீர் வடிகால், கான்கிரிட் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு ரூ. 219.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2020 - 2021 ன் கீழ் பணி செய்வதற்கு உரிய நிர்வாக அனுமதியும், மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னனை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Package | Name of Work | Est.Cost ( Rs.In Lakhs ) |
|---|---|---|
| 1 | Formation of BT Road at Old GH road Cross street, Kakkanji Colony Connecting Road, Vengala Nagar C- C Scheme road and Construction of SWD, Penny Cuick Nagar 40' C - C Scheme Road, Vasuki Colony Cross Street ( Ward No : 12, 18, 32, 33 ) Providing Paver Black Road at Meranda Lane ( Ward No : 15 ), Providing CC Pavement at Western Side ( Moffasal Bus Stand ), East Side ( City Bus Stand ) at ( Ward No : 32 ) Penny Cuick Bus Stand, in Theni Allinagaram Municipality | 219.00 |

**அலுவலகக்குறிப்பு** :-

1) தேர்வு செய்யப்பட்டுள்ள தெருக்களில் சாலைப்பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட திட்டத்தினை அரசு நிர்ணயிக்கும் நிதிப்பகிர்வில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம.

**தீர்மான எண். 1443 அலுவலக குறிப்பு 1, 2 3 மற்றும் 4அனுமதிக்கப்பட்டது.**

3) மேற்கண்ட திட்டத்திற்கு நகராட்சி பங்கு தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
4) மேற்கண்ட பணிகளுக்கு உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து, உரிய ஒப்புதல் பெற்று அதன்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3374/2020/இ1)

**தீர்மான எண். 1443 அலுவலக குறிப்பு 1, 2 3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 02:

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பழுதடைந்துள்ள கீழ்கண்ட விபரப்படியான தெருக்களில் உள்ள சாலையினை சீரமைக்கும் பணிகள் மற்றும் பேவர் பிளாக் சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கு ரூ. 183.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2020 - 2021 ன் கீழ் பணி செய்வதற்கு உரிய நிர்வாக அனுமதியும், மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னனை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Package | Name of Work | Est.Cost ( Rs.In Lakhs ) |
|---|---|---|
| 1 | Relaying of BT Road at Aranmanaipudhur scheme road ( 40' Road ), Aranmanaipudhur scheme road ( 60' Road ) , Master plan Complex road ( Employment, CEO and RTO Office Road ), Master Plan Complex road ( Collector Office Road ), Rice Mill Street, Power House Street at Ward No : 22, 25, 31 & 32 and Providing Paver Black Road Mandukaruppasamy Kovil Street, Kurunjinagar East Cross Street at Ward No : 11, 12 in Theni Allinagaram Municipality. | 183.00 |

**அலுவலகக்குறிப்பு** :-

1) தேர்வு செய்யப்பட்டுள்ள தெருக்களில் சாலைப்பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட திட்டத்தினை அரசு நிர்ணயிக்கும் நிதிப்பகிர்வில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம.
3) மேற்கண்ட திட்டத்திற்கு நகராட்சி பங்கு தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
4) மேற்கண்ட பணிகளுக்கு உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து, உரிய ஒப்புதல் பெற்று அதன்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3374/2020/இ1)

**தீர்மான எண். 1444 அலுவலக குறிப்பு 1, 2 3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 03:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் அலுவலகப் பயன்பாட்டிற்காக பிரிண்டர்கள் வாங்குவதற்கு கீழ்கண்ட 3 நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பிரிண்டர்களின் விபரம் | நிறுவனங்கள் கோரிய விலைப்புள்ளி தொகை ( ஒன்றின் விலை ) | | |
|---|---|---|---|---|
| | | **MERCURY SOFTWARE, Periyakulam** | **UNITED INFOTECH, Madurai** | **JV COMPUTERS, Theni** |
| 1 | Hp M1005 Multifunction Printer ( Scan, Copy, Print ) | 22500 | 24500 | 25000 |
| 2 | Hp Laser Pro MFP M126nw ( Scan, Copy, Print ) | 19500 | 21000 | 22000 |
| 3 | Hp Laser Jet Pro M202dw | 20500 | 22000 | 23000 |
| 4 | Canon LBP 2900 Printer | 13500 | 15000 | 16000 |
| **மொத்தம்** | | **76000** | **82500** | **86000** |

**அலுவலகக்குறிப்பு** :-

1) மேற்படி பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் **MERCURY SOFTWARE, Periyakulam** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியானது குறைவாக இருப்பதால் அந்நிறுவனத்தின் விலைப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1031/2020/இ1)

**தீர்மான எண். 1445 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 04:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தற்போது அனைத்து பணிகளும் கணிணி மயமாக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது பயன்பாட்டில் உள்ள பிரிண்டர்கள் தொடர்ந்து பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருவதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு அலுவலக பணிகள் பாதிப்படைகிறது.

எனவே அலுவகலத்தில் உள்ள பழுதடைந்துள்ள பிரிண்டர்களை சரிசெய்ய முடியாத பட்சத்தில் அலுவலகப் பயன்பாட்டிற்காக உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று புதிய பிரிண்டர்களை வாங்குவதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.110000/- ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

3) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1031/2020/இ1)

**தீர்மான எண். 1446 அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 05:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண். 29 பள்ளி வாசல் தெருவிலுள்ள எரியூட்டு மையானத்தில் பயன்படுத்தப்பட்டு, பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கும் இரும்பு பொருட்களை ஏலநிபந்தனைகளுக்கு உட்பட்டு கழிவு செய்வதற்கு 14.05.2020-ம் தேதியன்று ஏலம் நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டு கேட்கப்பட்டுள்ள ஏலகேள்விகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் | ஏலக்கேள்வி தொகை ( ரூ ) | உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி விபரம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.என்.முருகேசன்,<br>12, சிக்கந்தர் சாவடி,<br>மீனாட்சி மகால், மதுரை | 11000 | அதிகம் |
| 2 | திரு.எம் குமார்,<br>9/13, வ.உ.சி தெரு,மதுரை | 9250 | குறைவு |

**அலுவலகக்குறிப்பு** :-

1) வ.எண் 1 ல் குறிப்பிட்டுள்ள ஏலக்கேள்வியானது உயர்ந்த பட்ச கேள்வியாக இருப்பதால் திரு. என்.முருகேசன் என்பவரின் ஏலக்கேள்வி தொகை தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.280/2020/இ1)

**தீர்மான எண். 1447 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 06:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான ( கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையம் ) புதிய பேருந்து நிலையத்தில் காவல் பணி செய்வதற்கு தற்போது போதுமான பணியாளர்கள் இந்நகராட்சியில் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டு, காவல் பணிக்கு முன்னாள் படைவீரர் நல வாரியம் ( TEXCO ) பணியாளர்கள் மூலம் தினசரி 3 பணியாளர்களை சுழற்சி முறையில் பாதுகாப்பு பணிக்கு நியமனம் செய்வதற்கும், மேற்படி பணியாளர்களுக்கான ஊதியம் ஆண்டு ஒன்றுக்கு உத்தேசமான செலவினத்தொகை ரூ. 850000/- ஆகும். மேற்படி செலவினத்தொகையினை இந்கராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி செலவினத்தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

இ) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1032/2020/இ1)**

**<u>தீர்மான எண். 1448 அலுவலககுறிப்பு அ, ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தற்போது அனைத்து பணிகளும் கணிணி மயமாக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது பயன்பாட்டில் உள்ள பிரிண்டர்கள் தொடர்ந்து பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருவதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு அலுவலக பணிகள் பாதிப்படைகிறது.

எனவே அலுவகலத்தில் உள்ள பிரிண்டர்கள் அவ்வப்பொழுது பழுதுகள் ஏற்படும் போது உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று பிரிண்டர்களில் உள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.30000/- ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..
**(ந.க.எண்.1031/2020/இ1)**

**<u>தீர்மான எண். 1449 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 08</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ், | எண்: 785 நாள்: 08-05-2020 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 64 / ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2020 | ரூ: 49,200/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நாள்: 07-05-2020. | |

மேற்ககண்ட தொகை ரூ:49,200/- (ரூபாய்: நாற்பத்து ஒன்பது ஆயிரத்து இருநூறு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.24/2020/அ3)

**தீர்மான எண். 1450 அலுவலக அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 09:

தேனி - அல்லிநகரம் நகராட்சி **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக் கடை எண்: 36** குத்தகை விடுவதற்கு 22-05-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.T.K.சித்தார்த்,<br>த/பெ. T.கிருஷ்ணகுமார்,<br>நியூ ஸ்ரீராம் நகர், தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு<br>**ரூ:3,050/-** |
| 2 | திரு.D.சுந்தரபாண்டியன்,<br>த/பெ. V.தர்மர்,<br>பழைய G.H. சாலை,தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு<br>**ரூ:2,900/-** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:1-ல் கண்ட **திரு.T.K.சித்தார்த்** என்பவர் மாத வாடகையாக **ரூ:3,050/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். பேருந்து நிலையம் அருகாமையில் உள்ள தனியார் இடங்களில் தற்போது புதிதாக கடைகள் ஏற்பட்டுள்ளதால், பொது மக்கள் அக்கடைகளை நாடி செல்வதால் பேருந்து நிலைய கடைகளில் பொது மக்கள் வியாபாரம் அதிக அளவில் குறைந்துள்ளது. மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே கூடுதலாக வாடகை இருந்ததால் தொடர்ந்து வாடகை செலுத்த இயலாமல் குத்தகைதாரர் கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டார். இதனால் நகராட்சிக்கு வாடகை இழப்பு ஏற்படுகிறது. மேற்கண்ட இனத்திற்கு ஏற்கனவே 12-02-2020, 28-02-2020 மற்றும் 27-03-2020 ஆகிய தேதிகளில் மூன்று முறை ஏலம் கோரப்பட்டு எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே நகராட்சி நிதி வருவாயினை கருத்தில் கொண்டு வ.எண்:1-ல் கண்ட திரு.T.K.சித்தார்த் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1107/2020/அ3)

**தீர்மான எண். 1451 அலுவலக குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 10</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக் கடை எண்: 46** குத்தகை விடுவதற்கு 22-05-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.M.S.திலகர்,<br>சுப்பன் தெரு,<br>தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:5,900/-** |
| 2 | திரு.E.பிரேம்குமார்,<br>த/பெ. A.M.இலங்கேசுவரன்,<br>சுப்பன் தெரு,<br>தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:6,400/-** |

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:2-ல் கண்ட **திரு.E.பிரேம்குமார்** என்பவர் மாத வாடகையாக **ரூ:6,400/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே இருந்து மாத வாடகையினை விட பேருந்து நிலையம் அருகாமையில் உள்ள தனியார் இடங்களில் அதிக பரப்பளவில் உள்ள வணிக கடைகளுக்கான மாத வாடகையினை விட கூடுதலாக உள்ளது. மேலும், பேருந்து நிலைய கடைகளில் பொது மக்கள் வியாபாரம் அதிக அளவில் குறைந்துள்ளதால் கூடுதலாக வாடகை செலுத்த இயலாமல் குத்தகைதாரர் கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டார். இதனால் நகராட்சிக்கு வாடகை இழப்பு ஏற்படுகிறது. மேற்கண்ட இனத்திற்கு ஏற்கனவே 12-02-2020, 28-02-2020 மற்றும் 27-03-2020 ஆகிய தேதிகளில் மூன்று முறை ஏலம் கோரப்பட்டு எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே நகராட்சி நிதி வருவாயினை கருத்தில் கொண்டு வ.எண்:2-ல் கண்ட திரு.E.பிரேம்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1107/2020/அ3)

**<u>தீர்மான எண். 1452 அலுவலக குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 11</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி **மேற்கு சந்தை தெற்கு பார்த்த கடை (பழைய சுகாதார பிரிவு அலுவலகம்)** குத்தகை விடுவதற்கு 22-05-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.M.நாகராஜன்,<br>த/பெ. மணிகண்டன்,<br>நடுத்தெரு,வயல்பட்டி,<br>வீரபாண்டி, தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு<br>**ரூ:2,200/-** |
| 2 | திருமதி.K.நிவேதா,<br>க/பெ. கிஷோர் குமார்,<br>சுப்பன் தெரு - வார்டு -29,<br>ராஜாங்கம் லயன் வீடு,தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு<br>**ரூ:2,300/-** |

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:2-ல் கண்ட **திருமதி.K.நிவேதா** என்பவர் மாத வாடகையாக **ரூ:2,300/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட கடை 10X10- 100 ச.அடி. உள்ளது. மேற்கண்ட கடைக்கு அருகில் உள்ள கடைகளுக்கு சதுர அடி ரூ:21/- ஏலம் கோரப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிதி வருவாயினை கருத்தில் கொண்டு எண்:2-ல் கண்ட திருமதி.K.நிவேதா என்பவரது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1107/2020/அ3)

**<u>தீர்மான எண். 1453 அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 12</u>:

*தமிழ்நாடு அரசு பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறையின் 07.05.2020 ஆம் தேதியிட்ட அரசாணை எண் :51 ல் பொதுத் துறையில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களில் ( உள்ளாட்சித் துறை உட்பட) வயது முதிர்வில் பணி ஓய்வு பெறும் பணியாளர்களின் வயதினை 58 லிருந்து 59 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வுத்திரவு 31.05.2020 ஆம் தேதியன்று வயது முதிர்வில் ( 58 வயதில் ) ஓய்வு பெறும் பணியாளர்களுக்கும் பொருந்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அரசாணையின் கீழ்க்கண்ட விவரத்தினை மன்றம் பதிவு செய்ய வேண்டப்படுகிறது.*

“ **Order :** The Government have decided to increase the age of Superannuation of Government Servants from 58 years to 59 years and orders accordingly. This Will apply to all those who are in regular service as on date and due to retire on superannuation from 31.05.2020.

This order shall also be applicable to all teaching and non teaching staff Working in aided educational institutions and employees of all constitutional /statutory Bodies ,Public sector Undertakings including all state corporations ,Local Bodies, Boards, Commissions, Societies,etc.

***<u>அலுவலக குறிப்பு:</u>***

- *மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்*
- *மன்றம் அனுமதிக்கலாம்.* (ந.க.எண்: 02 /2020/சி1 )

- **<u>தீர்மான எண். 1454 பதிவு செய்யப்பட்டது.</u>**

## <u>பொருள் 13</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31, பங்களாமேடு சோலைமலை அய்யனார் கோவில் தெரு பைப் லைன் பதித்தல் மற்றும் சடையாள் தெருவில் பி.விசி டேங்க் அமைத்தல் பணிக்கு 05.05.2020–ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1. | திரு.S.மாணிக்கம் நகராட்சி ஒப்பந்ததாரர் | 67913.34 | 0.45% குறைவு |
| 2. | திருமதி.T.தவமணி, நகராட்சி ஒப்பந்ததாரர். | 76678.84 | 12.40% அதிகம |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.45% குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. S.மாணிக்கம்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.82/2020/இ2)

**<u>தீர்மான எண். 1455 அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 14</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து முனையத்தில் தெற்கு பக்கமுள்ள சுற்றுச்சுவர் பழுதடைந்த நிலையில் இடிந்து கீழே விழுந்து விட்டது. எனவே மேற்படி சுற்றுச் சுவரினை புதியதாக கட்டும் பணி மேற்கொள்ளுவதற்கு 22.05.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.டி.இரமேஷ், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 326764.75 | 0.05% குறைவு |
| 2 | திருமதி.எஸ்.சிட்டு, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 328714.63 | 0.54 % அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய திரு.டி.இரமேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1023/2020/இ1)

**<u>தீர்மான எண். 1456 அலவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 15</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திலிருந்து ( ஹோட்டல், கட்டண கழிப்பறை, பொது கழிப்பறைகள் மற்றும் தேனீர் கடைகள் ஆகியவைகளிலிருந்து ) வெளியேறும் கழிவுநீர் திறந்த வடிகாலில் சென்று, மதுரை சாலையிலுள்ள தாமரை குளத்தில் கலக்கும் சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்படி கழிவுநீரை பொதுமக்கள் நலன் கருதியும், நீர்நிலையில் மாசுபடியாத வகையில், அதற்கான சுத்திகரிப்பு அமைப்புகள் மாஸ்டர் பிளான் சாலையில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு 22.05.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.வி.செல்வராஜ்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>தேனி | 622852.00 | 0.15% குறைவு |
| 2 | திரு.பி.பவுன்<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>தேனி | 634852.00 | 1.80 % அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய திரு. வி.செல்வராஜ், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1024/2020/இ1)

**<u>தீர்மான எண். 1457 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 16</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்குச் சந்தையில், பொதுக்கழிப்பிடத்திற்கு மேற்கு பக்கமுள்ள காலியிடத்தில் நகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு சமீபத்தில் 7 கடைகள் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கடைகளின் கட்டிடத்தில் தற்போது Weathering Course, Pressed Titles, Grill Work, Painting மற்றும் மின்பணி ஆகியவைகள் மேற்கொள்ளுவதற்கு 22.05.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.வி.செல்வராஜ், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 511222.49 | 0.14% குறைவு |
| 2 | திரு.பி.பவுன் நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 511747.56 | 0.03 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :–**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய திரு. வி.செல்வராஜ், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1025/2020/இ1)

**தீர்மான எண். 1458அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 17:

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் . 3-ல் உள்ள பகவதியம்மன் கோயில் தெரு, மச்சால் தெரு மற்றும் கிணற்று தெருக்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சின்னக் குளத்தில் கலக்காத வகையில், மாற்று வழியில் செல்வதற்கான கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு 22.05.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.பாலகிருஷ்ணன், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 44807.83 | 3.06% அதிகம் |
| 2 | திரு.வி.கருப்பையா, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 43430.60 | 0.22 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :–**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய திரு.வி.கருப்பையா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1026/2020/இ1)

**தீர்மான எண். 1459 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 18:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு 45 எண்ணிக்கையிலான Battery Operator Vehicle வாங்கப்பட்டு பொதுசுகாதார பிரிவில் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேற்படி வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் சிறு சிறு பழுதுப்பணிகளை சரி செய்து, வாகனத்தின் பயன்பாட்டு தொடர்ந்து இருக்கும் வகையில் தனியார் மூலம் ஆண்டு பராமரிப்பு பணிகள் மூலம் மேற்கொள்வதற்கு 22.05.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | Unas E Rickshaw, Karaikudi | 819000.00 | 1.11% அதிகம் |
| 2 | Jayam Equipments & Engineering, Dharapuram | 807750.00 | 0.28 % குறைவு |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய Jayam Equipments & Engineering, Dharapuram என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1022/2020/இ1)

**<u>தீர்மான எண். 1460 அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 19</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியின் பொறியியல் பிரிவுகளில் உள்ள கணினிகளுக்கு தனி UPS மூலம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த UPS க்கான மின்கலங்கள் ( Battery ) வாங்கப்பட்டு சுமார் ஆறு ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆறு ஆண்டுகள் ஆன நிலையில், மின் கலங்களின் திறன் குறைந்து சார்ஜ் ஆகாதா காரணத்தினால் மின் தடை ஏற்படும் போது UPS மூலம் கணினிகளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்க முடியாததால் அனைத்து கணினிகளும் தன்னிச்சையாகவே அனைந்து விடுகிறது. இதனால் கணிணிகள் பழுதடைவதற்கு வாய்ப்புகள் உள்ளது.

எனவே உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று பழுதடைந்துள்ள 4 மின் கலங்களுக்கு பதிலாக, புதியதாக ( Tubuler Battery - 12V - 110 AH ) 4 மின் கலங்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ. 0.50 இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..
(ந.க.எண். 1312/2020/இ1)

**<u>தீர்மான எண். 1461அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 20</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சி பகுதியில் கொசுக்களால் பரவும் டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களை தடுக்கும் பொருட்டு **86** கொசு ஒழிப்பு பணியாளர்கள் (Domestic Breeding Checkers) வெளி கொணர்வு முறையில் **06.02.2019–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கடந்த **01.03.2019** முதல் **6** மாத காலத்திற்கு Relyon facility services Chennai நிறுவனத்தின் மூலம் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மன்ற அனுமதி பெறப்பட்டு பணி நீட்டிப்பு செய்யப்பட்டு பணிக்காலம் கடந்த **30.04.2020**ஆம் தேதியுடன் முடிவடைகிறத. கொசு ஒழிப்பு பணியாளர்கள் பொதுசுகாதார பணிக்கு அவசியம் தேவைப்படுகிறது. மேலும் கோவிட்–**19** தடுப்பு பணிக்கும் இப்பணியாளர்கள் பயன்படுத்தப் பட்டு வருவதால் பொது சுகாதார அவசியம் கருதி மேலும் பணி நிட்டிப்பு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்க.படும் வரையில் ஏற்கனவே பணியாளர்கள் விநியோகம் ம்சய்யும் நிறுவனமான Relyon facility services Chennai நிறுவனம் மூலமாக ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் **86** கொசு ஒழிப்பு பணியாளர்களை பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது சுகாதார அவசிய அவசியம் கருதி 86 DBC பணியாளர்களை தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்ற பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்க்லாம். (ந.க.எண்.143/2019/எச்1)

**<u>தீர்மான எண். 1462 அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 21</u>:

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள பணியாளர்கள் வழங்கும் பணிக்கு **26.03.2020–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளியை தேர்வு செய்த வழங்கிட Evaluation Committee நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. **11.05.2020–ம்** தேதி Evaluation Committee–ன் அறிக்கையில் பெறப்பட்ட இரண்டு தொழில் நுட்ப ஒப்பந்தபுள்ளிகளும் ( Technical Bid) ஒப்பந்தப்புள்ளிக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப தகுதியுடையதாக இல்லை (Technically not Resonsive)

என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மறுஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2736/2019/எச்1)

**<u>தீர்மான எண். 1463 அனுமதிக்கப்பட்டத.</u>**

## <u>பொருள் 22</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், 68.83 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் மூலம் புதிய குடிநீர் திட்டன் கீழ் பணிகள் முடிக்கப்பட்டு, மேற்கண்ட திட்டம் கடந்த 21.02.2020 ம் தேதி முதல் மேற்கண்ட புதிய குடிநீர் திட்டம் நகராட்சியில் ஒப்படைப்பு செய்யப்பட்டு தற்போது நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி மேற்கண்ட திட்டத்தின் கீழ் 16500 எண்ணம் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டதில் , வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு தேனி மாவட்ட அரசிதழ் ஆணையின்படி, உள்ளாட்சித்துறை அறிவிக்கை ந.க.எண். 7411/2016. நாள். 08.07.2016 ன் படி 01.02.2020 ம் தேதி முதல் குடிநீா கட்டணம் ஆய்வு செய்யப்பட்டு உயர்த்தப்பட்டு கனினீ கேட்பில் உள்ளீடு செய்யப்பட்டுவருகிறது.

மேற்கண்ட 16500 எண்ணம் கொண்ட குடிநீர் இணைப்புகளை வருவாய் உதவியாளர்கள் மற்றும் குழாய் பொருத்துனர் மூலம் தள ஆய்வு செய்யப்பட்டதில் 90 எண்ணம் கொண்ட குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானி அளவுகளின் படி குடிநீர் கட்டணம் உயர்த்தப்படாமல் உள்ளது. அதன்படி கீழ்க்கண்ட இணங்களுக்கு கனினியில் அளவுமானி அளவுகளின்படி உயர்வு செய்ய இயலாத காரணத்தினால் ஒரே அளவான வீதத்தில் 01.04.2020 ம் தேதி முதல் புதிய குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண் | இனங்கள் | பழைய குடிநீர் கட்டணம். | தற்போது உயர்த்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|---|
| 1 | காம்ப்ளக்ஸ்(Complex). ஹோட்டல், பெரியமில், மருத்துவமணை, பெட்ரோல் பல்க், | ரூ 350 முதல் | மாதம் ரூ 1000.00 வீதம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.12000.00 |
| 2 | லாட்ஜ்,திருமண மண்டபங்கள், தியேட்டர்கள், | ரூ. 550 முதல் | மாதம் ரூ 1500.00 வீதம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.18000.00 |

எனவே மேற்கண்டவாறு , அளவு மானியின் அளவுகளின் ( Metre Reading ) நீக்கம் செய்து விட்டு ஒரே அளவான விதத்தில் (Flat Rate) ல் கேட்பினை கனினியில் உள்ளீடு செய்யவும், பயன்பாடு இல்லாத உள்ள குடிநீர் இணைப்பு எண்கள்.125/008/00083, 125/017/00010,

125/029/00020, 125/030/00028 மற்றும் 125/030/00296 ஆகிய இணைப்புகளை நீக்கம் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2020/இ2)

**<u>தீர்மான எண். 1464 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 23</u>:

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் ( வைகை அணையின் ஆதாரமாகக்கொண்டு ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்ற நிலையில், இத்திட்டத்தினை 21.02.2020 ம் நாளில் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் வைகை ஆற்றில் தலைமை நீரேற்றும் நிலையம் ( Raw Water- Inke well ) குருவம்மாள்புரம் பகுதியில் கட்டப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் Filter bed & Clear Water மற்றும் NRT நகரில் உள்ள ( Pumping Station) ஆகியவைகளை இயக்க, எலக்ட்ரியசியன் ( Electrician ) - 2 Nos,இயக்குதல் பணி ( Maintanance Asst ) -6 Nos, மற்றும் ஆய்வக உதவியாளர் ( Lab Asst ) 1 No, தேவைப்படுகிறது. இப்பணியாட்களுக்கான தினக்கூலியினை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தரவிலை பட்டியலின் அடிப்படையில் கீழ்க்காணும் விபரப்படி வழங்குவதற்கும், பணியாளர்களுக்கு SPF0 மற்றும் காப்பீடு தொகை வழங்குவதற்கும்.

**பணியாட்கள் விபரம்.**

| | | |
|---|---|---|
| 1 | எலக்ட்ரியசியன் ( Electrician ) - 2 பேர் | 2x30Dayx669/day=Rs 40140.00 |
| 2 | இயக்க உதவியாளர் (Maintanance Asst )- **6**பேர் | 6x30Dayx445/day=Rs 80100.00 |
| 3 | ஆய்வக உதவியாளர் ( Lab Asst )- 1 நபர் | 1x30Dayx526/day =Rs.15780.00 |
| **மொத்தம்** | | **Rs. 136020.00** |
| EPF -12 % ( Per Month )<br>Insurance ( 9 NOs x 460/ 1No / Year )<br>GST | | Rs. 16322.00<br>Rs. 4140.00<br>Rs. 24484 |

இப்பணியினை நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராமக்குடிநீர் திட்ட கோட்டம், தேனி அவர்களின் க.எண். கோ.தே-அ.கு.நீ. அ.வி.தி./ வபு/ கி.கு.தி/ தேனி/2020/நாள். 29.04.2020ன் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, மேற்படி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை மேற்கொண்ட ஒப்பந்ததாரரான M/s. RCM Ifrastracture, ltd, Hyderabad என்ற நிறுவனத்தின் துணை ஒப்பந்ததாரரும், ஏற்கெனவே, இயக்குதல் மற்றும் பாமரிப்பு பணியினை செய்து வந்த M / s. Ujwala Infratech ( India ) Pvt. Ltd. Tirupathi என்ற நிறுவனத்தின் மூலம் இப்பணியினை மேற்கொள்வதற்கும், மேற்கண்ட இயக்குதல் மற்றும்

பராமரிப்பு பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் ஒப்புதல் பெறும் நாள் வரை மேற்காணும் பணியாட்கள், அதற்கான தொகையில் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.14.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தற்போது கொரோனா வைரஸ் மூலம் நோய் பரவுவதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களிடம், பெற முடியாத சூழ்நிலையில் இருப்பதாலும் மேற்கண்ட இயக்குதல் பணியை, மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட பராமரிப்பு பணி அவசர அவசியத் கருதி, மன்றத்தின் முன் அனுமதியை எதிர் நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகிரிக்கலாம். (ந.க.எண்.650/2020/இ2)

**தீர்மான எண். 1465 அலுவலக குறிப்பு அ ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 24:

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/2014059 | புதிய பேருந்து நிலையம் செகண்டரி பிளாக் கடை எண்: 46 | 31-03-2020 முதல் |
| 2 | 125/2017014 | புதிய பேருந்து நிலையம் செகண்டரி பிளாக் கடை எண்: 51 | 31-03-2020 முதல் |
| 3 | 125/2014021 | புதிய பேருந்து நிலையம் மெயின் பிளாக் கடை எண்: 8 | 31-03-2020 முதல் |
| 4 | 125/BD01/00039 | புதிய பேருந்து நிலையம் செகண்டரி பிளாக் கடை எண்: 25 | 30-06-2020 முதல் |
| 5 | 125/2014061 | புதிய பேருந்து நிலையம் செகண்டரி பிளாக் கடை எண்: 48 | 30-06-2020 முதல் |
| 6 | 125/2014062 | புதிய பேருந்து நிலையம் செகண்டரி பிளாக் கடை எண்: 49 | 30-06-2020 முதல் |
| 7 | 125/2018014 | புதிய பேருந்து நிலையம் செகண்டரி பிளாக் கடை எண்: 56 | 30-06-2020 முதல் |
| 8 | 125/BD01/00026 | புதிய பேருந்து நிலையம் செகண்டரி பிளாக் கடை எண்: 58 | 30-06-2020 முதல் |
| 9 | 125/2005093 | கிழக்கு சந்தை கிட்டங்கி எண்: 3 | 30-06-2020 முதல் |

மேற்கண்ட குத்தகை கடைகளை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏலம் கோரப்பட்டதை மன்றம்

அனுமதிக்கலாம். (ந.க.எண்.1414/2019/அ3)

**தீர்மான எண். 1466 அலுவலக குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 25:

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனம் குத்தகைதாரரால் தொடர்ந்து வாடகை செலுத்தபடாத நிலையில் டிசம்பர் - 2019 முதல் நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டது.

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஜனவரி - 2020 முதல் குத்தகை உரிமத்தினை ரத்து செய்திடவும், மேலும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | 125/2014065 | புதிய பேருந்து நிலையம் செகண்டரி பிளாக் கடை எண்: 52 | S.சுரேஷ் |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏலம் கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1414/2019/அ3)

**தீர்மான எண். 1467 அலுவலக குறிப்பு அ மற்றும் ஆ ஒப்புதல் செய்யப்படுகிறது.**

## பொருள் 26:

அ) இநநகராட்சியின் 2019–2020–ம் நிதியாண்டு ஆண்டு கணக்குகள் முடிவு செய்து கணினியில் பதிவு செய்து இணக்கம் செய்வதற்கு பட்டய கணக்கர் (Charted ஹஉஉடிரவேள ) துணையுடன் முடிவு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் இந்நகராட்சியில் கணக்குகளை கணினியில் இணக்கம் செய்து முடிப்பதற்கு முந்தைய நகர்மன்ற அனுமதியின் அடிப்படையில் நியமனம்செய்யப்பட்ட பணியாளர் ( பட்டய கணக்கர்) உதவியுடன் 2019–2020–ம் ஆண்டு கணக்கினை முடிப்பதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) இந்நகராட்சியின் தணிக்கை அறிக்கையினை தயார் செய்வதற்கும் ஓய்வு பெற்ற பணியாளர்களின் பணிப்பதிவேடுகளையும், தற்போது பணிபுரியும் பணியாளர்களின் பணிப்பதிவேடுகளையும் ஆய்வு செய்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் கடந்த நகர்மன்றத்தின் அனுமதியின்படி நியமனம் செய்யப்பட்ட திரு.மு.முத்துச்சாமி ஆய்வாளர் (ஓய்வு) உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அவர்களுக்கு 2020–2021 ஆம் நிதியாண்டில் ஊதியம் வழங்கும் பொருட்டு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.1,80,000/–க்கும் மன்றத்தின் வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நிர்வாக நலன் கருதி இந்நகராட்சியில் பணியாளர்கள் பணிப்பதிவேட்டில் உள்ள குறைபாடுகளை தணிக்கை தடைப்பத்திகளையும் நிவர்த்தி செய்வதற்கு நியமனம் செய்யப்பட்ட பணியாளருக்கு ஆகும் செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.481/2019/பி2)

**தீர்மான எண். 1468 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 27:

தேனி - அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:26 பழைய டி.வி.எஸ் சாலையில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தினை வருவாய் ஆய்வாளர் குறிப்பின் பேரில் கட்டிடத்தின் தன்மையினை ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள நிலையில் தற்போது மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதாலும், கழிப்பிடம் வடிகாலின் மீது கட்டப்பட்டுள்ளதால் மழைக்காலங்களில் தண்ணீர் செல்ல முடியாத நிலை உள்ளதாலும், மேலும் கழிப்பறைக்குள் தண்ணீர் தேங்கி அடைப்பு ஏற்படும் நிலையில் கழிப்பிடத்தினை தொடர்ந்து பயன்படுத்திட இயலாத நிலையில் உள்ளதாலும், சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் கழிப்பிட கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திடலாம் என நகராட்சி பொறியாளர் தெரிவித்துள்ளார்.

எனவே பொது மக்கள் நலன் கருதி சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட பொது கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட மன்ற அனமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 1469 அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம் நகராட்சி